பக்கங்கள்:-22

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 10 | வெள்ளிக்கிழமை | 25.08.2023 | அதிர்வு 24 |
|---|---|---|---|---|---|

## எட்டு வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் நோர்வூட் பொலிஸ் பிரிவில் உள்ள ஆரம்ப பிரிவு பாடசாலை ஒன்றின் ஆசிரியரை நேற்று முன்தினம் நோர்வூட் பொலிஸார் கைது 07▶



# திருமலையில் புதிய மதத் தலங்கள் அமைக்க ரணில் கட்டுப்பாடு விதிப்பு

### இந்திய உதவியுடன் அப்பிரதேச அபிவிருத்தியாம்

திருகோணமலை,ஓக. 25

திருகோணமலை மாவட்டத்தில் புதிய மத வழிபாட்டுத் தலங்களை எதிர்காலத்தில் நிர்மாணிக்கும்போது, கிழக்கு மாகாண ஆளுநர், மாவட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

அதேநேரம் இந்தியாவின் உதவியுடன் திருகோணமலை மாவட்டத்தை பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் 05▶



# இனவாதப் பிரச்சினை ஏற்பட இடமளியோம்!

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் உறுதி

**கொழும்பு, ஓகஸ்ட் 25**

**“இலங்கையில் மீண்டும் இனவாத முரண்பாடுகள் ஏற்படும் வகையிலான சூழல் உருவாகியுள்ளதாக சர்வதேச புலனாய்வுப் பிரிவிலிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.** 07▶

# தேசப்பற்றை இந்திய இளைஞர்களிடம் இங்குள்ள இளையோர் கற்க வேண்டும்!

### இப்படி உபதேசம் செய்கிறார் விமல் வீரவன்ஸ



”தேசப்பற்றுத் தொடர்பில் இந்திய இளைஞர்களைப் பார்த்து இங்குள்ள இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.”

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இந்தியாவுக்கு வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றும்போதே விமல் வீரவன்ஸ இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

“எமது பக்கத்து நாடான இந்தியா சந்திரனுக்குச் சென்ற நான்காவது நாடாகியமை தொடர்பில் அந்த நாட்டுக்கு 03▶

# கஜேந்திரகுமாரின் இல்லத்தை சுற்றிவளைக்க இடமளியாதீர்!

### நாடாளுமன்றத்தில் டிலான் கோரிக்கை

எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டையும் சுற்றிவளைக்க எவருக்கும் இடமளிக்க முடியாது என்றும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரின் வீட்டுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க 02▶



## இரகசியம்



அவர் பாடசாலைக் காலத்திலிருந்தே நண்பர். நல்ல வாசகர். தேடித் தேடி வாசிப்பார். நிறைகுடம் போன்றவர். அதிகம் விமர்சனம் செய்ய மாட்டார். எப்போதாவது இருந்து விட்டு நறுக்கென்று நான்கு வார்த்தைகளில் – நச்சென்று – கொடுத்து 05▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# தேரர் தம் காணிக்குள் செல்வதைத் தடுக்க கிழக்கு ஆளுநருக்கு அதிகாரம் இல்லை!

## புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் திட்டவட்ட அறிவிப்பு



"திருகோணமலை பொரலுகந்த ரஜமஹா விகாரை காணிக்குள் அம்பிட்டியே சீலவங்ச திஸ்ஸ தேரர் உட்பிர வேசிப்பதற்குத் தடை விதிக்கும் அதிகாரம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குக் கிடையாது. பொரலுகந்த ரஜமஹா விகாரை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கிய அறிவுறுத் தலை அரசு ஏற்றுக்கொள்ளாது. பொரலுகந்த விகாரைப் பகு திக்கு அந்தத் தேரர் செல்லலாம். அங்கு அவர் வசிக்கலாம். அதற்குத் தடையேதும் கிடையாது."

– இவ்வாறு புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச் சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை 27/2 இல் கேள்விகளை முன்வைத்த சுயாதீன எதிரணி எம்.பி.யான அத்துரலிய ரத்ன தேரர் எழுப்பிய கேள்விக்குப் பதி லளிக்கும்போதே புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மேற்கண்டவாறு கூறி னார்.

சுயாதீன எதிரணி எம்.பி.யான அத்துரலியே ரத்ன தேரர் –

"திருகோணமலை மாவட்டத்தில் நகரங்கள் மற்றும் பட்டினங்கள் பிரதேச செயலகப் பிரிவு பகுதி தொல்பொருள் மரபுரிமைக்குச் சொந்தமானது. 6 வருடங்களுக்கு முன்னர் இப்பகுதியில் விகாரை ஒன்றை நிர்மாணிப்பதற்கு 60 பேச்சர்ஸ் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங் களும் வழங்கப்பட்டுள்ளன.

வெல்கம விகாரையின் விகாராதிபதி சீலவங்ச திஸ்ஸ தேரருக்கு இந்தக் காணி வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காணி யைத் தூய்மைப்படுத்தி அங்கு வசிப்பதற்குத் தேரர் சென்ற போது தமிழர்களில் ஒருசிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தச் சம்பவத்தை அடிப் படையாகக் கொண்டு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சீலவங்ச திஸ்ஸ தேரர் அந்தக் காணிக்குள் உட்பிரவேசிப்பதற்கும், அங்கு வசிப்பதற்கும் தடையுத்தரவு விதிக்குமாறு திருகோணமலை நகரம் மற்றும் பட்டினங்கள் பிரதேச செயலாளரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு தடையுத்தரவு விதிக்க கிழக்கு மாகாண ஆளுநருக்கும் பிரதேச செயலாளருக்கும் அதிகாரம் கிடையாது. சட்ட ரீதியில் வழங்கப்பட்டுள்ள காணிக்குள் உட்பிரவேசிப்பதைத் தடுப்பது சட்டவிரோதமானது. இப்பகுதியில் வாழும் தமிழர் களும், தமிழ்த் தலைவர்களும் போராட்டத்தில் ஈடுபடவில்லை. உயர்மட்டத்தில் இருந்து கொண்டு செயற்படும் ஒரு நபரின் சூழ்ச்சியின் ஊடாகவே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக் கப்படுகின்றன .

பொரலுகந்த ரஜமஹா விகாரைக்குச் சட்ட ரீதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் விகாரைப் பகுதிக்குள் உட்பிர வேசிப்பதற்குத் தடையுத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் மாகாண ஆளுநர் மற்றும் பிரதேச செயலாளருக்கு உள் ளதா ?

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு உரிய நடவ டிக்கை எடுத்துள்ளதா ?

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகள் அழிக்கப்படுவதை அரசு அறிந்துள்ளதா ? அது தொடர்பான தகவல்கள் உள்ளதா ?

சட்டவிரோதமாக மாகாண ஆளுநர் வழங்கிய அறிவு றுத்தலை அரசு ஏற்றுக்கொள்ளுமா?" – என்று கேள்விகளை எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பதிலளிக்கையில் –

"பொரலுகந்த ரஜமஹா விகாரைக்கு சட்ட ரீதியில் அனு மதி வழங்கப்பட்டுள்ள நிலையில் விகாரைப் பகுதிக்குள் உட் பிரவேசிப்பதற்கு தடையுத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் மாகாண ஆளுநர் மற்றும் பிரதேச செயலாளருக்குக் கிடை யாது. பொரலுகந்த விகாரை 13-15- 024 என்ற இலக்கத்தின் கீழ் புத்தசாசன திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, விகாரை மற்றும் அப்பகுதிக்கு எவரும் செல்லலாம் தடையேதுமில்லை.

பொரலுகந்த ரஜமஹா விகாரை மற்றும் போராட்டம் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் விசேட பேச்சு இடம்பெற்றது. திருகோணமலை மாவட்ட அரச அதிபர், திருகோணமலை நகரம் மற்றும் பட்டினங்கள் பிரதேச சபையின் செயலாளர் ஆகிய தரப்பினர் அழைக்கப்பட்டு அவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகள் அழிக்கப்படுவதை அரசு அறிந்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான தகவல்கள் நாளாந்தம் திணைக்களத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொரலுகந்த ரஜமஹா விகாரை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கிய அறிவுறுத்தலை அரசு ஏற்றுக் கொள்ளாது. பொரலுகந்த விகாரைப் பகுதிக்கு அந்தத் தேரர் செல்லலாம் அங்கு அவர் வசிக்கலாம். அதற்குத் தடையேதும் கிடையாது." – என்றார்.

## கஜேந்திரகுமாரின் இல்லத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும் என்றும் சுயாதீன எதிரணி உறுப்பினரான டிலான் பெரேரா சபையில் கோரிக்கை விடுத்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டைச் சுற்றிவளைக் கவுள்ளதாகக் குழுவொன்று அறிவித்துள்ளமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இலங்கை கிரிக் கெட் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போது, விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் டிலான் பெரேரா இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அதன்போது டிலான் பெரேரா மேலும் கூறுகையில் –

"நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் பலத்தை நான் சந்தித்தேன். அவர் நாளை (இன்று) நாடா ளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வர வேண்டும் என்ற போதும், அவரால் வர முடியாது என்று கூறியுள்ளார். அதற்குக் காரணம் அவரின் கொழும்பிலுள்ள வீட்டைக் குழுவொன்று சுற்றிவளைக் கவுள்ளதாகத் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடன் சென்றே இவ்வாறு சுற்றிவளைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பாரதூ ரமான விடயமே.

கஜேந்திரகுமார் எமது நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பி னர். அவரின் தாயார் மிகவும் நோய்வாய்ப்பட்டவராக இருக்கின் றார். இது தொடர்பில் பாதுகாப்புத் தரப்புக்கு அறிவிக்க வேண்டும். ஒவ்வொருக்கும் வேண்டியவாறு எம்.பிக்களின் வீடுகளைச் சுற்றிவளைக்க இடமளிக்க முடியாது. இதனால் தயவு செய்து அவருக்கும், அவரின் வீட்டுக்கும் தேவையான பாதுகாப்பை உடனடியாக அரசு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்." – என்றார்.

இதன்போது சபைக்குத் தலைமை தாங்கிய உறுப்பினர் சமன் பிரிய ஹேரத், இந்த விடயம் தொடர்பில் சபாநாயகருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பார் எனத் தெரிவித்தார்.

# இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் விரைவில் இலங்கை வருகிறார்

## பெட்ரோலிய விநியோகத்துக்கான குழாய்ப் பாதை அமைக்கத் திட்டம்



இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையில் அவர் திருகோணமலைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

பெட்ரோலியப் பொருள்களைப் பரிமாற்றுவதற்காக இரு நாடுகளையும் இணைக்கும் இந்தியாவின் குழாய்ப் பாதைக்கான மூலோபாய முதலீட்டுத் திட்டம் தொடர்பிலேயே அவரின் திருகோணமலை பயணம் அமைவதாகத் தெரியவருகிறது.

அவர் செப்டெம்பர் 2 அல்லது 3ஆம் திகதி இலங்கைக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் முக்கிய தரப்பினருடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கையும் இந்தியாவும் ஏற்கனவே தரைப்பாலம் மற்றும் எரிபொருள் இணைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்த உயர்மட்டத்தில் ஒப்புக்கொண்டுள்ள சூழலில், இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது.

# இன வாதம் , மத வாதத்தை முன்னிறுத்தி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி!

## நாடாளுமன்றில் சாணக்கியன் எச்சரிக்கை

“இனவாதம், மதவாதத்தை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஏனெனில் இனவாதம், மதவாதம் மற்றும் வெறுப்புப் பேச்சுக்களை முன்னிலைப்படுத்தி செயற்பட்டவர்கள் தற்போது மீண்டும் களத்தில் இறங்கியுள்ளார்கள். இதனால் நாடு முழுவதும் இனவாதக் கருத்துக்கள் தற்போது தீவிரமடைந்துள்ளனன்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் பேசுகையில்,

“இனவாதக் கொள்கையுடைய அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் தரப்பினர்கள் தற்போது வெறுக்கத்தக்க பேச்சுக்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வரும் நிலையில் நாட்டில் இந்து மற்றும் பௌத்த மத முரண்பாடுகள் தோற்றம் பெறும் சூழல் காணப்படுவதாக எச்சரிக்கைகள், செய்திகள் வெளியாகியுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு இன, மத முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மறுபுறம் மகாவலி அபிவிருத்தி விவகாரம் முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. பௌத்த பிக்குகள் “சாணக்கியன், சாணக்கியன்” என்று எனது பெயரைக் கூறி கூச்சலிட்டு எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள்.

இனவாதம், மதவாதம் மற்றும் வெறுப்புப் பேச்சுக்களை முன்னிலைப்படுத்தி செயற்பட்டவர்கள் தற்போது மீண்டும் களத்தில் இறங்கியுள்ளார்கள். தேர்தல் ஒன்று இடம்பெற்றால் தென்னிலங்கையில் இனவாதப் பிரசாரங்களை அடிப்படையாகக் கொண்டு விருப்பு வாக்குகளுக்குக் கடும் போட்டி ஏற்படும் அளவுக்கு நாடு முழுவதும் இனவாதக் கருத்துக்கள் தற்போது தீவிரமடைந்துள்ளன .

இனவாதம், மதவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர்



மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆகவே இந்து – பௌத்த முரண்பாடுகள் தொடர்பில் வெளியாகியுள்ள செய்திகள் குறித்து அரசு விசேட கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.” – என்றார்.

## தேசப்பற்றை இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

நாங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அதேபோன்று இந்தியாவின் அதிஷ்டமாக இவ்வளவு செலவு செய்து சந்திரனுக்குப் போகும் போது மலசலகூடமின்றி இத்தனை பேர் இருக்கின்றனர், வறுமையில் இத்தனை பேர் இருக்கின்றனர், படிக்காதவர்கள் இத்தனை பேர் இருக்கின்றனர் என்றெல்லாம் கூறி அந்த மகிழ்ச்சியைத் தடுக்கும் கீழ்த்தரமான கலாசாரம் இந்திய இளைஞர்களிடம் இல்லை. அது தொடர்பில் பெருமைப்பட வேண்டும். அவர்கள் எந்த இனம், குலமாக இருந்தாலும் இந்தியக் கொடியுடன் இந்திய தேசம் என்ற புதுமையான உணர்வுடன் இருக்கின்றனர். அதனை விடுத்து அங்குள்ள குறைகளைக் கூறிக்கொண்டு அதனைத் தடுக்கும் எண்ணத்தில் அங்குள்ளவர்கள் இல்லை.

எமது இளைஞர்களையும் இந்தியாவிடம் இருந்து கற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துக்கொண்டு சந்திரனுக்குச் சென்ற நான்காவது நாடான இந்தியாவுக்கு எமது வாழ்த்துக்களையும் கௌரவத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.” – என்றார்.

தேவை
கல்வி சம்பந்தமான
You tube chanel இற்கு
ஆங்கிலப் பேச்சுத் திறமையுள்ள
presenter தேவை.
ஆங்கிலத்தில் சரளமாக
உரையாற்றவும் எழுதவும்
கூடியவர்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும்.
0752604360

Required
Need someone who
can host Quiz in
English Medium on
Stage for AL students.
Please contact:-
0752604360

# யாழிலிருந்து 35 பயணிகளுடன் கட்டுநாயக்காவுக்கு வந்த சொகுசு பஸ் நீர்கொழும்பில் தீப்பற்றி எரிந்தது





யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்குப் பயணிகளை ஏற்றி வந்த சொகுசு பஸ் நீர்கொழும்பில் தீப்பற்றி எரிந்தது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

வெளிநாடு செல்வதற்காக 35 பயணி களை ஏற்றி வந்த சொகுசு பஸ் ஒன்றே இவ்வாறு தீப்பற்றி எரிந்துள்ளது.

சம்பவம் குறித்து பஸ்ஸின் சாரதி கூறுகையில் –

புதன்கிழமை இரவு எட்டு மணி அளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து 35 பயணிகளை ஏற்றுக் கொண்டு விமான நிலையம் நோக்கி புறப்பட்டோம்.

வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணி அளவில் நீர்கொழும்பு தளுவகொட்டுவ பிரதேசத்தில் வைத்து திடீரென தீ பற்றி கொண்டது. உடனடியாக பஸ்ஸில் இருந்த பயணிகள் காப்பாற்றப்பட்டு, வேறு வாகனங்களில் அவர்கள் விமான நிலையம் சென்றனர். நீர்கொழும்பு தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு வந்து தீயைக் கட்டுப்பாடுத்தினர்.– என்றார்.

இந்தத் தீ விபத்துக் காரணமாக பஸ் முற்றாக எரிந்து உள்ளது. பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. கொச்சிக்கடை பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# சரத் வீரசேகரவின் உரைக்கு எதிராக சட்டத்தரணிகள் இன்று போராட்டம்

முல்லைத்தீவு நீதிவான் தொடர்பில் சரத் வீரசேகர எம்.பி தெரிவித்த கருத்துக்கு எதிராக இன்று காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து அடையாள கண்டனப்போராட்டம் ஒன்றை நடத்த முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கடந்த 22 ஆம் திகதி நாடாளுமன்றில் முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக அவதூறு பரப்பும் வகையிலும், நீதித்துறை சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்தும் வகையிலும், ஆற்றிய உரையைக் கண்டித்தே இந்த எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ஏனைய கிளைச்சங்கங்களும்தத்தமதுநீதிமன்றங்களில்அடையாள கண்டனப் போராட்டத்தினை மேற்கொள்ளுமாறு நட்புரிமையுடன் கேட்டுக்கொள்வதாக முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி விபத்தில் 14 வயது சிறுவன் பலி

## இளைஞர் ஒருவர் படுகாயம்

யாழ்., வடமராட்சி, கொற்றாவத்தைப் பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதுண்ட விபத்தில் 14 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ளான். அத்துடன் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கரணவாய் வடமேற்கு, கொற்றாவத்தை – கணபதி மில்லுக்கு அருகாமையில் நேற்று பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கொற்றாவத்தைப் பகுதியைச் சேர்ந்த சாகித்தியன் (வயது 14) எனும் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

அப்பகுதியைச் சேர்ந்த அஜந்தன் (வயது 21) என்பவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் டிப்பரும் வளைவுப் பகுதியில் திரும்பியபோது இரண்டு வாகனங்களும் நேருக்கு நேர் மோதின.

இதில் மோட்டார் சையிக்கிளில் பயணித்த இருவரும்



தூக்கி வீசப்பட்டமையோடு, மோட்டார் சைக்கிள் டிப்பர் வாகனத்தினுள் சிக்குண்டு தீப் பிடித்து எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியாவின் சந்திரயான்-3 சாதனைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்து

சந்திரயான்-3 விண்கலத்தை வெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தில் தரையிறக்கியதன் மூலம் இந்தியா அடைந்துள்ள தனித்துவமான சாதனைக்காக இந்திய பிரதமர் உள்ளிட்ட நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியா பெற்றுள்ள இந்த மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி தொடர்பில் அண்டை சகோதர நாடாக இலங்கையும் பெருமிதம் கொள்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தியாவின் சாதனை தொடர்பில் நேற்று நாடாளுமன்றத்திலும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

நிலவின் தென் துருவத்தில் விண்கலத்தை தரையிறக்கிய உலகின் முதல் நாடாக இந்தியா பதிவாகியுள்ளது என தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்தியாவிற்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விட்டுப் போவார். அவர் கூறும்போது அதன் அர்த்தம் உடன் விளங்காது. வீட்டுக்குப் போய், ஆற அமர இருந்து, யோசிக்கும் போதுதான் அதன் ஆழ அகலம் விளங்கும்.

முதலில் உதாரணத்துக்கு ஒன்று.

அது யுத்த காலம். புலிகள் வெற்றித் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்த காலகட்டம். கூட்டத்தோடு சேர்ந்து புலிகளின் களவெற்றிகளைக் கொண்டாடும் மனநிலையில் அவர் எப்போதும் இருந்ததில்லை. இந்த வெற்றிகளுக்குப் பின்னால் ஆபத்து புதைந்திருப்பது போல அவ்வப்போது இரண்டொரு வார்த்தைகளில் போட்டுத் தாக்கி விட்டு நகர்ந்து விடுவார்.

கட்டுநாயக்கா விமானத் தளம் மீது புலிகளின் வெற்றித் தாக்குதலை அடுத்து இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். புலிகளின் சாதனையை எல்லோரும் சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்தோம். சத்தமின்றி – சலனமின்றி – செவிமடுத்துக் கொண்டிருந்த அவர் கடைசியாக புறப்படும்போது மட்டும் வாய் திறந்தார்.

“இது எல்லாம் வெற்றிதான். அது உண்மையே. இந்தப் பெரிய அழிவை எதிரிக்குத் தந்த பின்னரும் எதிரி நிமிர்ந்து உறுதியாக நிற்கிறான் என்பதை மறந்துவிடாதீர்கள். ஆனால் பெரிய ஆளணி – அம்புகள், படையணிகள், ஹொவிட்ஸர் பீரங்கிகள், கனரக ஆயுதங்கள், குண்டு வீச்சு விமானங்கள் செய்ய முடியாத விடயத்தை, சில சமயங்களில் ஒரு ‘புல்லட்’ – ரவை – செய்து விடும். பெரிய தற்கொலைப் படையணி புகுந்து கட்டுநாயக்காவில் பேரழிவைத் தந்த பின்னும் எதிரியின் வலிமை குன்றிவிடவில்லை. ஆனால் ஒரு ரவை, ஒரு முழு படைப்பல சாம்ராஜ்யத்தையே அழித்துவிடக் கூடிய பலவீன நிலையில்தான் நாங்கள் (தமிழர்கள்) இருக்கின்றோம்.” – என்று கூறிவிட்டு நகர்ந்தார் அந்த நண்பர்.

அவர் புறப்பட்டுச் சென்று சில நிமிடங்களின் பின்னர்தான் அவர் கூறியவற்றின் ஆழ, அகலங்களை – யதார்த்தப் புற நிலைகளை – என்னால் உணர முடிந்தது. பின்னால் நடந்தவை சரித்திரம்.

சுமார் இரு தசாப்தங்களுக்கு முன்னர் யதார்த்த பூர்வமாக அப்படிப் பேசிய அந்த நண்பரை நீண்ட காலத்தின் பின் நேற்று தொலைபேசியில் பிடித்தேன். பல விடயங்கள் குறித்துப் பேசினோம். நான் அதிகம் பேச அவர் கேட்டுக் கொண்டிருந்தார். பேச்சு அரசியல் பக்கம் திரும்பியது.

தமிழரை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வா குறிப்பிட்டமையை நினைவூட்டினேன். இப்போது நாட்டின் சுகாதாரத் துறையை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா வெளிப்படையாகக் கூறி இருக்கின்றமையைச் சொன்னேன்.

தமிழ் தலைமைகளின் வழிநடத்தல்களினால் திசை தெரியாது தடுமாறி நிற்கும் தமிழ் மக்கள் மீள்வதற்கு என்ன வழி, யார் தலைமை வகிப்பார்கள் என்று கேட்டேன்.

வழமை போல சிரித்துக் கொண்டு இரண்டு வசனங்களில் அவர் பதில் தந்து விட்டு தொலைபேசியைத் துண்டித்தார். அவர் கூறிய வசனத்தின் ஆழத்தை – அர்த்தத்தை – புரிய எனக்கு சில நிமிடங்கள் பிடித்தன. யதார்த்தத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

“காலம் தலைவர்களைத் தரும். ஆனால் அதற்கு இடம் அளிக்க வேண்டும். இப்போதும் தமிழர்களைக் காப்பாற்ற கடவுள் வரத் தேவையில்லை. காலன் – காலம் – வந்தால் போதும். இயற்கை தன் கடமையை இனியும் காலம் தாழ்த்தாமல் இரண்டு தடவைகள் செய்தால் போதும்.” – என்றார் அந்த நண்பர்.

நான் அந்தப் பதிலை கேட்டு விக்கித்துப் போனேன். அவர் குறிப்பால் உணர்த்தியது உங்களுக்குப் புரிந்ததா வாசகர்களே?

நாகரிகப் பண்பு கருதி அவரும் விவரிக்கவில்லை. நானும் அதை விவரிக்க விரும்பவில்லை. ஆனாலும் ஒன்றை ஏற்றுக் கொள்கிறேன். அந்த நண்பர் ஒரு யதார்த்தவாதி...!

## திருகோணமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று திருகோணமலை விமானப் படைத் தளத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இந்தியாவின் உதவியுடன் வலுசக்தி, போக்குவரத்து, துறை முகம், கப்பற்துறை, விமானம், கைத்தொழில் மற்றும் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்யும் இலக்குடன் கூடிய வேலைத்திட்டம் விரைவில் திருகோணமலையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அரச காணிகள் மற்றும் மகாவலி காணிகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. 2019 முதல் 2023 ஆண்டு காலப்பகுதியில் அந்தக் காணிகளை வழங்குதல் குறித்து அறிக்கையொன்றை தமக்கு வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

அபிவிருத்திச் செயன்முறையில் காணிகள் முதன்மையான காரணி எனவும், அதில் சரியான முகாமைத்துவத்துடன் பேணப்படாவிட்டால், எதிர்பார்க்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைய முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், போட்டிபோட்டு மத வழிபாட்டுத் தலங்கள் அமைப்பதை நிறுத்துமாறும், எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்கும்போது, ஆளுநர், மாவட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டுமெனவும் அதிபர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான திட்டத்தை சர்பானா ஜுரோன் நிறுவனம் தயாரித்துள்ளதாகவும் அந்தத் திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு திருகோணமலையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் ரணில் கூறினார்.

அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் வெருகல் முதல் பாணமை, குமண கடற்கரையை அபிவிருத்தி செய்வதற்கும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் கடற்றொழில், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் ஏற்படும் இந்த புதிய முன்னேற்றத்துடன் திருகோணமலை நகரத்தை ஒரு முக்கிய வர்த்தக நகரமாக மாற்ற வேண்டும் என்றும் திருகோணமலைக்குப் பின்னர் மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் இந்த அபிவிருத்தியைக் கொண்டு செல்வதே தமது நோக்கம் என்றும் அவர் கூறினார்.

குறிப்பாக காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து, அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் கூறிய ஜனாதிபதி, மகாவலி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 1985 திட்டத்தின் பிரகாரம் காணிகளைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் சில காணிகள் தொடர்பில் அமைச்சரவையின் அனுமதியின்றி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# நல்லூரான் 4 ஆம் திருவிழா வீதி உலா










# பண்டாரவளை விடுதியொன்றில் பெண்ணொருவர் சடலமாக மீட்பு

## சந்தேகநபர் தலைமறைவு

பண்டாரவளை, தங்கிரியவிலுள்ள விடுதி அறையொன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த பெண்ணொருவரின் சடலம் நேற்றுக் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது என்று பண்டாரவளைப் பொலிஸார். தெரிவித்துள்ளனர்.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதான நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை இந்த ஹோட்டலின் அறையொன்றில் தங்கியிருந்துள்ளார். அவர் தங்கியிருந்த அறைக்கு நேற்றுக் காலை ஹாலிஹெல, எட்டம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணொருவர் வருகை தந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று மாலை 4.30 மணியளவில் அந்த நபர் அந்த அறையிலிருந்து பதற்றத்துடன் வந்தமையை அவதானித்த விடுதிப் பணியாளர் ஒருவர், அறையில் கதவு திறந்திருந்ததையும் அவதானித்துள்ளார். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சந்தேகத்தால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் பெண் உயிரிழந்திருந்தமையுடன் விசம் மற்றும் இரத்தக்கறைகள் அங்கு கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் விடுதி நிர்வாகம் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

எட்டம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் உயிரிழந்த பெண்ணுடன் இருந்த ஆணொருவரே இந்தச் சம்பவத்தின் பின்னர் தப்பிச் சென்றுள்ளார் எனவும், மரணத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இந்தச் சம்பவம் தொடர்பிலும் தப்பிச் சென்ற சந்தேகநபர் குறித்தும் பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வேறு கதவுகளையும் தட்டுவதா?

இலங்கை - இந்திய நட்புறவு மேலும் நான்கு துறைகளில் மேம்பாடு அடையும் என்று கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கூறியிருக்கிறார்.

இந்திய - இலங்கை நாடாளுமன்ற நட்புறவுக் குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் இலங்கை நாடாளுமன்றக் கட்டடக் குழுநிலை அரங்கம் ஒன்றில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனா தலைமையில் நடைபெற்ற போது, அங்கு இலங்கையின் சட்டமாக்கல் அதிகாரம் உடையவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தூதுவர் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

உணவுப் பாதுகாப்பு, சக்தி - வலு பாதுகாப்பு, நிதி ஆதரவு மற்றும் நீண்ட கால முதலீடு ஆகிய நான்கு துறைகளிலேயே இந்தியாவின் ஆதரவு இலங்கைக்குக் கிட்டவிருகின்றது என்றும் அவர் கூறியிருக்கின்றார். அயல்நாடு என்ற முறையில் இலங்கைக்கு பாரத உபகண்டத்தின் முழு உதவி - ஒத்துழைப்பு தாராளமாகக் கிட்டி வருகின்றது என்பது கண்கூடு.

ஆனால், இலங்கையில் வஞ்சிக்கப்பட்ட - பாதிக்கப்பட்ட - அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட - இனமாக வாழும் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்தியாவிடம் இருந்து இதற்கு அதிகமாகவே வரலாற்று ரீதியான உரிமையுடன் எதிர்பார்க்கின்றார்கள். அது கிடைக்கவில்லை என்பதுதான் அவர்களின் மனவேதனையும் துரதிஷ்டமும் ஆகும்.

மேற்படி கூட்டத்தில் காணொலி வாயிலாக உரையாற்றிய இந்திய வெளிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கைத் தமிழர்களின் நியாயமான அபிலாசைகள், எதிர்பார்ப்புகள் குறித்து வலியுறுத்திக் கோடிட்டுக் காட்டினாராயினும், இவ்விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு - அழுத்தம் - ஈடுபாடு - போதுமானதாக இல்லை என்பதுதான் இலங்கைத் தமிழர்களின் ஆதங்கம். வேதனை.

இலங்கைத் தமிழர்கள் தமது உரிமைகளுக்காக வலிமையுடன் போராடிய போது, அதில் நேரடியாகத் தலையிட்டு , தனது ஆதிக்கத்தைச் செலுத்தி, இலங்கை தமிழர்களுக்காக தீர்வு ஒன்றைத் தானே முடிவு செய்து, ஒப்பமிடும் கடப்பாடும் பொறுப்பும் தனக்கு இருப்பதாக கருதி, அவற்றின் அடிப்படையில் இலங்கை அரசுடன் சர்வதேச ரீதியான பகிரங்க ஒப்பந்தம் ஒன்றையும் செய்தது இந்தியா. அதையும் தாண்டி, தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தை அடக்குவதற்கு நேரடியாக ஈடுபட்டு, களத்தில் குதித்துப் போராடியது. தமிழர்களின் ஆயுத வழி உரிமைப் போராட்டம் வளர்ந்ததிலும், அதை அடியோடு அழித்தொழித்ததிலும், பிரதான பங்கு இந்தியாவுக்கு உண்டு என்பது மறக்க - மறுக்க - மறைக்க - கூடியது அல்ல.

இத்தகைய கடப்பாடும் பொறுப்பும் உள்ள இந்தியா, இலங்கைத் தமிழர் விவகாரத்தை பத்தோடு பதினொன்றாகக் கையாள முடியாது. பிரதானமானதாக அது கையாளப்பட வேண்டும்.

கொழும்புடன் நான்கு துறைகளில் ஒத்துழைப்பு - மேம்பாடு பற்றி பேசும் புதுடில்லி, அந்த நான்கு துறை ஒத்துழைப்பும் கூட இலங்கைத் தமிழர்களுக்கு நீதி செய்யப்படும் பொறிமுறையின் மீதுதான் கட்டி எழுப்பப்பட முடியும் என்பதையும் வலியுறுத்தியிருக்க வேண்டும். ஆனால் வலியுறுத்தவில்லை.

இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தை இனிமேலும் இந்தியா பத்தோடு பதினொன்றாக புறமொதுக்கிக் கையாளுமானால், இலங்கைத் தமிழர்களும் இந்தியாவை அப்படியே நோக்க வேண்டி இருப்பது தவிர்க்க முடியாததாகி விடும். புதுடில்லியின் கதவை மட்டுமல்ல, வேறு வாசல்களையும் அவர்கள் தேடித் தட்டும் வழியற்ற கட்டாய நிலைக்கு ஏதிலிகளான இலங்கைத் தமிழர்களை புறமொதுக்கி, நெட்டித் தள்ளாமல், புதுடில்லி பார்த்துக் கொள்ள வேண்டும்.

## இனவாதப் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆனால், ஒரு சில பிரதேசங்களில் ஒரு சில குழுக்கள் அரசியல் நோக்கங்களுக்காக இனவாதப் பிரச்சினைகளை தீவிரப்படுத்தக் கடும் முயற்சி எடுத்து வருகின்றன.

எது எவ்வாறாயினும் அவ்வாறான இனவாதப் பிரச்சினையை உருவாக்கப் புலனாய்வு பிரிவும், பாதுகாப்புப் பிரிவும், அரசும் இடமளிக்காது."

– இவ்வாறு தேசிய புலனாய்வுப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது எனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் சபையில் அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

"இலங்கையில் மீண்டும் இனவாத மோதல்கள் இடம்பெறும் வாய்ப்புக்கள் இருப்பதாக சர்வதேச புலனாய்வுப் பிரிவு தகவல் வெளியிடப்பட்டுள்ளது என்று இன்று (நேற்று) காலையில் சில சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. எதிர்க்கட்சித் தலைவரும் இது தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பியிருந்தார்.

அவ்வாறு, எந்தவொரு வெளிநாட்டுப் புலனாய்வு பிரிவிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ தேசியப் பாதுகாப்பு தொடர்பிலும், இனவாத முரண்பாடுகள் தொடர்பிலும் எமக்கு எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை. மிகவும் பொறுப்புடன் இதனைக் கூறுகிறேன்.

அதேபோன்று, முகப்புத்தகம் போன்றவற்றில் வெளியிடப்படும் கட்டுக் கதைகளுக்கும் எந்நேரமும் எம்மால் பதிலளித்துக்கொண்டும் இருக்க முடியாது. அதனால், இது தொடர்பில் முதலில் நாடாளுமன்றத்துக்குக் கருத்து தெரிவிப்பேன். ஆனாலும், தற்போது எமது நாட்டில் ஒருசில இடங்களில் ஒருசில குழுக்கள் அரசியல் நோக்கங்களுக்காக நாட்டில் இனவாதப் பிரச்சினையை உருவாக்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதாக எமது புலனாய்வுப் பிரிவு தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

அந்தக் குழுக்கள் தொடர்பில் பாதுகாப்புப் பிரிவும் அரசும் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

முல்லைத்தீவைச் சேர்ந்த அன்ரனி ஜெகநாதன் பீட்டர் இளஞ்செழியன் என்பவர் குருந்தி விகாரை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தி வருபவர். அவர் ஒரு கத்தோலிக்கர். இந்த விடயத்தில் அவருக்கு ஏன் இவ்வளவு அக்கறை என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும். ஆனால், இந்த விடயத்தில் பிரச்சினையை உருவாக்க முயற்சிக்கின்றார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மேலும், குருந்தி தொல்லியல் காணியினூடாக பௌத்தத்தின் எதிர்காலமோ அல்லது இந்து சமயத்தின் எதிர்காலமோ தீர்மானிக்கப்படப்போவதில்லை. 30 வருட கால யுத்தத்தைக் கடந்தும் இன்னும் நாம் பாடம் கற்றுக் கொள்ளவில்லை. இன்னும் இனவாதப் பிரச்சினையை உருவாக்க முயற்சிப்பவர்களுக்கு எங்களின் கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எது எவ்வாறாயினும் அவ்வாறான இனவாதப் பிரச்சினையை உருவாக்கப் புலனாய்வு பிரிவும், பாதுகாப்புப் பிரிவும், அரசும் இடமளிக்காது." – என்றார்.

## எட்டு வயதுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செய்துள்ளனர்.

இந்த ஆசிரியர் 8 வயதுச் சிறுமி ஒருவரைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என அவர் கற்பிக்கும் பாடசாலை மாணவி ஒருவர் ஹட்டன் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் படி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். நேற்று ஹட்டன் நீதிமன்றத்தில் அவர் ஆஜர்படுத்தப்படவிருந்தார்.

இந்த ஆசிரியர் கடந்த காலத்திலும் இவ்வாறான குற்றச் செயலில் ஈடுபட்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமி டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு அங்கு வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிரான செயற்பாட்டை வடக்கு, கிழக்கில் தடுங்கள்

## அரசிடம் வேண்டுகிறார் அத்துரலியே ரத்ன தேரர்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும்.

இனவாதத்தைத் தூண்டி விட்டு, நாட்டில் மீண்டும் யுத்தத்தை தோற்றுவிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக தடுக்க வேண்டும். அது அனைவரது பொறுப்பாகும் என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை பிரிவு இருபத்தேழு இரண்டின் கீழ் கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலை பௌத்த மரபுரிமைகளை கொண்டுள்ளது. மகாவம்சம் உட்பட பௌத்த வரலாற்று நூல்களில் குருந்தூர்மலை குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1933 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குருந்தூர் மலையில் 78 ஏக்கர் நிலப்பரப்பு தொல்பொருள் மரபுரிமை என்று வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டது.

மறுபுறம் 1,250 ஹெக்டயர் நிலப்பரப்பை கொண்டுள்ள நாகசோல வனப்பகுதியில் பௌத்த மரபுரிமைகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டுள்ளன.

தமிழர்களுக்கு சட்ட அந்தஸ்துடன் காணிகளை வழங்குவதை நாங்கள் எதிர்க்கவில்லை. வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள், தொல்பொருள் மரபுரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணிப்பிரச்சினைக்கு காணி ஆணைக்குழு ஊடாக தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும்.

இனவாதத்தை தூண்டி விட்டு நாட்டில் மீண்டும் யுத்தத்தை தோற்றுவிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக தடுக்க வேண்டும். அது அனைவரது பொறுப்பாகும். – என்றார்.

அத்துடன், குருந்தூர்மலை விவகாரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிப்பதை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க



தவிர்த்துக் கொண்டார்.

குருந்தூர்மலை விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் அவ்விடயம் குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது, எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிப்பது முறையற்றது என அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சபையில் குறிப்பிட்டார்.

## மூன்று இலங்கையர்கள் பெங்களூருவில் கைது



இந்தியாவின் பெங்களூரு நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் தங்கியிருந்த மூன்று இலங்கைப் பிரஜைகளை பெங்களூர் பொலிஸின் மத்திய குற்றப்பிரிவு (சிசிபி) கைது செய்துள்ளது. இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றதாம். இந்திய ஊடகங்களின் செய்திகளின் அடிப்படையில் , மூன்று இலங்கையர்களையும் பெங்களூரின் புறநகர் பகுதி ஒன்றிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பை வாடகைக்குப் பெற்றுக் கொடுத்த இந்திய நாட்டவரும் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணையின் போது, சந்தேக நபர்களுக்கு இலங்கை பாதாள உலகத்துடன் தொடர்பு இருப்பதை அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர் என்றும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

Singhams Media
அலை ஓசை
துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள் நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.
ஆடியபாதம் வீதி, திருநல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 076 610 5467, 077 124 2732

# 4 பிரதான துறைகள் ஊடாக இலங்கையுடன் உறவுகளை மேம்படுத்த இந்தியா எதிர்பார்ப்பு



நான்கு பிரதான துறைகள் ஊடாக இந்திய – இலங்கை உறவுகளை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

உணவு பாதுகாப்பு, வலுசக்தி பாதுகாப்பு, நிதியுதவி மற்றும் நீண்டகால முதலீடுகள் ஆகிய நான்கு துறைகள் ஊடாக இந்திய – இலங்கை உறவுகளை வலுப்படுத்த எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை – இந்திய நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் கூட்டத்தில் உரையாற்றிய போதே உயர்ஸ்தானிகர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை – இந்திய நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் ஊடாக பரிமாற்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய சபாநாயகர், இந்தியா வழங்கி வரும் ஆதரவுகளுக்கு இதன்போது நன்றி கூறியுள்ளார்.

இதனிடையே, இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

காணொலித் தொழில்நுட்பம் ஊடாக கலந்துகொண்டு அவர் இதனை கூறினார் என நாடாளுமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை – இந்திய நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட அங்கத்துவ உறுப்பினர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# பெரும்போக அறுவடை வரையில் அரிசிக் கையிருப்பு போதுமானது

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

தற்போதுள்ள அரிசிக் கையிருப்பு அடுத்த பெரும்போக அறுவடை வரைப் போதுமானது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தற்போது நிலவும் வறட்சியால் சுமார் 75 ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் அழிவடைந்தாலும், வறட்சி இல்லாத ஏனைய மாகாணங்களில் விளைச்சல் மிகவும் அதிகமாக கிடைத்ததால், வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என அவர் கூறினார்.

விவசாயிகளுக்கு தேவையான மூன்று வகையான உரங்களையும் உரிய நேரத்தில் வழங்கியமையாலும் நிதியுதவி அளித்தமையினாலும் கடந்த பெரும்போகம் வெற்றியடைந்ததாகவும், வறட்சி இல்லாத ஏனைய மாகாணங்களில் அதிக அறுவடை கிடைத்தது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் தொழிற்சங்க உறவுகள் பிரிவின் ஏற்பாட்டில் ஜனாதிபதி அலுவலகத்தில் "விவசாயத்துறையின் நவீனமயமாக்கல் மற்றும் அதன் சவால்கள்" என்ற



தலைப்பில் நடைபெற்ற துறைசார் நிபுணர் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த விடயங்களைக் கூறினார்.

நெல் விலை உயர்வை நல்லதொரு நிலையாக கருதினாலும் நுகர்வோரை அசௌகரியத்திற்கு உள்ளாக்க அனுமதிக்க முடியாதென அவர் தெரிவித்தார்.

எனவே, நெல் மற்றும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த பொருத்தமான பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டுமென விவசாய அமைச்சர் வலியுறுத்தினார்.





# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com




G20
भारत 2023 INDIA
सत्यमेव जयते
Azadi Ka Amrit Mahotsav
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்
"ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்"
சிறப்புப் பட்டிமன்றம்
நவீன தொழில்நுட்பங்களின் வரவு...
வரமே! வரமல்ல!
திருமதி பாரதி பாஸ்கர்
பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன்
திரு. ச. லலிசன்
திரு. ந. விஜயசுந்தரம்
திரு.எஸ்.ராஜா
(நடுவர்)
திரு. நடராஜன்
செல்வி இ.ஹார்த்தியாயினி
திரு. ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ
திரு. ஜ. யோகநாதன்
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 25 ஆகஸ்ட், 2023
நேரம் : மாலை 6.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்



# தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் 96வது பிறந்தநாள் நினைவுப்பேருரை

தலைவர்
திரு. இ. பேரின்பநாயகம்
எதிர்க்கட்சி தலைவர் - முன்னாள் செயலாளர்

நினைவுப்பேருரை
கலாநிதி கா. விக்னேஸ்வரன்
(முன்னாள் வடகிழக்கு மாகாணசபை செயலாளர்)

சிறப்புரை
திரு s. s. குகநாதன்
(டான் குழுமம்)

சிறப்புரை
வண பிதா s.ஜெபநேசன்
(முன்னைநாள் ஆயர்)

இடம்: தந்தை செல்வா கலையரங்கம்
(யாழ் மத்திய கல்லூரி அருகில்)

காலம்: 27-08-2023 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 4.00 மணி

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை
Amirthalingam Memorial Foundation
Moolai, Chulipuram, Jaffna, Sri Lanka
E-mail: [illegible] Web: www.amirthalingam.com
0775274300 / 0777279238
19-08-2023

---



# நினைவு நல்லது

ஒலி, ஒளி ஊடகர் P. விக்னேஸ்வரனின்
ஐம்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வு

## நூல் அறிமுக விழா

காலம்: 29. 08. 2023

நேரம்: பிற்பகல் 2.00 மணி

இடம்: நூலகக் கேட்போர் கூடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## உரையாற்றுபவர்கள்:

**வரவேற்புரை**
பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் - தலைவர், ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**தலைமையுரை**
பேராசிரியர் சி. ரகுராம், கலைப் பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**அறிமுகவுரை**
திரு. கணபதி சர்வானந்தா - சிரேஷ்ட ஊடகவியலாளர்

**வாழ்த்துரை**
பேராசிரியர் என். சண்முகலிங்கன், முன்னைநாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஆய்வுரை**
திரு. நிலாந்தன், அரசியல் ஆய்வாளர்

**நயப்புரை**
திரு. எஸ். விஸ்வநாதன், முன்னைநாள் பணிப்பாளர், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் - தமிழ்ப்பிரிவு

**ஏற்புரை**
நூலாசிரியர்

**நன்றியுரை**
திரு. டினேஷ் கொடுதோர், சிரேஷ்ட விரிவுரையாளர், ஊடகக் கற்கைகள் துறை




அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

25ம் திகதி இலங்கைக்கு வரும்

# சொப்பன சுந்தரி

## குஷியாகக் காத்திருக்கும் இளைஞர்கள்

கரகாட்டக்காரன் காலம் முதலாய் அனேகமானோரால் தேடப்பட்டுக் கொண்டிருக்கும் 'சொப்பன சுந்தரி' யை மாதவனும் அவரது சினிமா நண்பர்களும் சுமார் ஆறு வருடங்களாக மறைத்து வைத்திருந்திருக்கிறார்கள். இதற்கு மேலும் ஒளித்து வைத்திருப்பது நல்லதல்ல என்று நினைத்தவர்கள், எதிர் வரும் ஒகஸ்ட் 25ஆம் திகதி 'சொப்பன சுந்தரி'யை ரிலீஸ் செய்யப் போவதாக அறிவித்ததில் இருந்து இளைஞர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு உருவாகி யுள்ளது.

**யார் இந்தக் குழுவினர்? ஏன் இவர்கள் ஆறு வருடங்களாகச் 'சொப்பன சுந்தரி'யை மறைத்து வைத்திருந்தார்கள்?**

கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு முன்னிருந்தே பல குறும்படங்கள் மூலமாக இலங்கைத் திரைத் துறையினரின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்தவர் இயக்குனர் மாதவன் மகேஸ்வரன். 'அப்பால்', 'என்னாச்சு?' போன்ற குறும்படங்கள் மூலம் நன்கு அறியப்பட்ட மாதவன், வெவ்வேறு விருது விழாக் களில் பல விருதுகளைத் தனது குறும்படங்கள் மூலம் வென்றுள்ளார். இந்த இளம் இயக்குனர் தன் சினிமா நண்பர்களின் கூட்டணியில் இயக்கியி ருக்கும் முதலாவது முழுநீளத் திரைப்படமே 'சொப்பன சுந்தரி'.

2017ம் ஆண்டில் படமாக்கப்பட்டு, சுமார் ஆறு வருடங்களாக பின்களத் தயாரிப்புப் பணி களில் இருந்த 'சொப்பன சுந்தரி' பல சவால் களைத் தாண்டி இந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 25ம் திகதி திரைக்கு வந்து ரசிகர்களைக் குஷிப்படுத்தப் போகிறது.

இலங்கையில் தமிழில் உருவாக்கப்படும் முழுநீளத் திரைப்படங்கள் பல இப்போது வெளி வந்த வண்ணம் இருக்கின்ற இந்த சூழலில் ரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நோக்கத்தோடு தயாரிக்கப் பட்டிருக்கும் 'சொப்பன சுந்தரி'யும் திரைக்கு வருவது, இலங்கையின் தமிழ் சினிமாத்துறை மும்முரமாக இயங்கத் தொடங்கி விட்டது என்பதற்கான அடையாளமே!.




மாதவனின் ஆஸ்தான கதாசிரியரும் நடிகருமாகிய ஜோயல், 'சொப்பன சுந்தரி'க்கான கதை, திரைக்கதையை எழுதி, ஒரு பிரதான கதாபாத்திரத்திலும் நடித்திருக்கின்றார்.கொழும்பு நகரைக் கதைக்களமாக கொண்டு உருவாகி யிருக்கும் இத்திரைப்படத்தில், இலங்கையின் புகழ் பூத்த கதாநாயகி நிரஞ்சனி சண்முகராஜா 'சுந்தரி' கதாபாத்திரத்திலும், அவருடன் இணைந்து பேர்ழிஜா, கஜானன், நரேஷ், தனுஷ் செல்வ நாதன், வருண் துஷ்யந்தன், ரவி, ஜெனோஷன் ஆகியோரும் முக்கிய பாத்திரங்களில் நடித்திரு க்கிறார்கள். இயக்குனர் மாதவனும் ஓர் பிரதான பாத்திரமேற்று நடித்திருக்கிறார்.

ஒரு பெரும் சிக்கலில் சிக்கிக் கொள்ளும் மூன்று நண்பர்களும், அவர்களுக்கு விளையும் வில்லங்கங்களும் என்று விறுவிறுப்பான இரண் டரை மணிநேர முழுநீள நகைச்சுவைத் திரில்லர் திரப்படபடமாக 'சொப்பன சுந்தரி' தயாராகி இருக்கிறது.

எல் எக்ஸ்ரீமோ, என்னாச்சு? என்று குறும்படங்கள் மூலம் தங்களின் ஒத்திகைகளைப் பார்த்து வைத்திருந்த மாதவனும் நண்பர்களும் அடுத்து ஒரு முழுநீளத் திரைப்படத்தை எடுக்கலாம் என்று 2017ம் ஆண்டு முடிவு செய்தார்கள். அந்த முடிவின் விளைவாக காதல், கொமெடி, பாடல்கள், ஆக்ஷன், ட்விஸ்ட் என முற்றுமுழுதான கொமெர் ஷல் பாணியில் இந்த 'சொப்பன சுந்தரி'யை உருவாக்கியிருக்கிறார்கள்.




### சொப்பன சுந்தரி திரையிடப்படும் திரையரங்கு விபரங்கள் இதோ:

- SAVOY 3D - WELLAWATE
- CONCORD - DEHIWALA
- REGAL - DEMATAGODA
- PVR - COLOMBO (FROM SEPT 01)
- REGAL - JAFFNA
- NELSON - TRINCOMALEE
- GK CINEMAX - KALMUNAI
- AMUTHA CINEMA - VAVUNIYA

## இரண்டரை மணிநேர முழுநீள நகைச்சுவைத் திரில்லர்

கிட்டத்தட்ட ஆறு மாதங்களாகத் தயாரிப் பாளர்களின் முதலீட்டிற்காக காத்திருந்த 'சொப்பன சுந்தரி', பின்னர் மாதவன், கஜானன் மற்றும் ஜோயலின் சொந்தத் தயாரிப்பில் 2017ம் ஆண்டின் பிற்பகுதியில் படமாக்கப்பட்டது. சமல் விக்ரமசிங்க வின் ஒளிப்பதிவிலும், இயக்குனர் மாதவனின் படத் தொகுப்பிலும் உருவாகி இருக்கும் காட்சிகளுக்கு இசையமைத்திருக்கிறார் பிரபல இசையமைப்பாளர் ஜீவானந்தன் ராம். ஜீவாவின் மெட்டுகளுக்கு வருண் துஷ்யந்தன், ராகுல் ராஜ் மற்றும் சங்கர் வரிகள் எழுதியுள்ளனர்.




இத்திரைப்படத்தின் படப்பிடிப்பிற்குப் பின்ன ரானதொழில்நுட்பப்பணிகளையும்செய்துகொண்டு, அதே கலைஞர்களின் கூட்டணியில், 2020ஆம் ஆண்டில் **'SUNDAY'** எனும் இணையத் தொடரையும் Dialog நிறுவனத்தின் VIU செயலிக்காக மாதவன் இயக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத் தொடரில் பேர்ழிஜா முதன்மைக் கதாபாத்திரத்தி லும், இலங்கை சினிமாத் துறையில் பலரது அன்பையும் வென்ற கலைஞன் அமரர் தர்ஷன் தர்மராஜ் அவர்கள் ஒரு பிரதான பாத்திரத்திலும் நடித்திருந்தனர்.

இலங்கையில் இன்னும் ஒரு முற்று முழுதான தொழிற்துறையாக மாற்றம் பெறாத தமிழ் திரைப்படத் துறையில் ஒரு முழுநீளத் திரைப் படைத்தைத் தயாரித்து வெளியிடுவது என்பது, அதுவும் தயாரிப்பாளர்கள் யாருமே இல்லாமல் இம்மாபெரும் இலக்கை ஆறு வருடங்களாகப் போராடி அடைவது என்பது உண்மையிலேயே ஒரு உன்னதமான சாதனைதான். இக்கூற்றை வழி மொழிவதைப்போல அமைந்திருக்கிறது, ஜுலை மாத ஆரம்பத்தில் இணையத்தில் வெளியான 'சொப்பன சுந்தரி' ட்ரெய்லர் இளைஞர்கள் மத்தியில் பெற்று வரும் அமோகமான வரவேற்பு.


சொப்பன சுந்தரி படக் குழுவில் சிலர்

ஒரு நண்பர் பட்டாளத்தின் உழைப்பிலும், பெரும் பொருட்செலவிலும் உருவாகி, ஆறு வருட விடாமுயற்சியால் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 25ம் திகதி திரைக்கு வரும் 'சொப்பன சுந்தரி', பார்ப்பவர்களை சிரித்து மகிழ வைக்கப் போவதும், இளைஞர்களால் மகிழ்ந்து கொண்டாடப்படப் போவது நிச்சயம்.

# வேதாரண்யம் மீனவர்கள் மீது கடல் கொள்ளையர் தாக்குதல்!

## 2 லட்சம் ரூபா மதிப்பிலான பொருட்களை பறித்துச் சென்றனர்



தமிழகத்தின் வேதாரண்யம் பகுதி மீனவர்கள் மீது கடல் கொள்ளையர் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த வெள்ளப்பள்ளம் பகுதியைச் சேர்ந்த ஏழு மீனவர்கள் கடந்த 21 ஆம் திகதி கடலில் மீன் பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் 22 ஆம் திகதி நள்ளிரவு கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, அங்கு இரண்டு படகுகளில் வந்த இலங்கை கடல்கொள்ளையர்கள் 6 பேர், தமிழக மீனவர்களின் படகுகளில் ஏறி, அவர்களை இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளனர்.

பின்னர், படகுகளில் வைத்திருந்த ஜி.பி.எஸ். கருவி, தொலைத்தொடர்பு கருவி, மின்கலங்கள், மீன்பிடி வலைகள், மீன்கள், கையடக்க தொலைபேசிகள் 20லிட்டர் டீசல் உள்ளிட்ட 2 லட்சம் ரூபா மதிப்பிலான பொருட்களை எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான மீனவர்கள் வெள்ளப்பள்ளம் கடற்கரைக்கு நேற்று முன் தினம் காலை வந்துசேர்ந்தனர். கம்பியால் தாக்கப்பட்டு காயமடைந்த ராமராஜன் என்பவர் வேதாரண்யம் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமைவாக வேதாரண்யம் கடலோரக் காவல் குழும பொலிஸார் வழக்கு பதிவு செய்து, விசாரணை செய்து வருகின்றனர்.

இதேவேளை, கடந்த 21 ஆம் திகதி ஆறுகாட்டுத்துறையைச் சேர்ந்த 11 மீனவர்களை இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்கி பொருட்களைக் கொள்ளையடித்த நிலையில், தற்போது வெள்ளப்பள்ளம் மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தமிழக மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

# நீட் விவகாரத்தில் ஆளுநரை தி.மு.க. சீண்டிப் பார்க்கிறது

## - குற்றம் சாட்டுகிறார் அண்ணாமலை

நீட் விலக்கு மசோதாவில் ஆளுநர் கையெழுத்திட்டு, குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவிட்டார் எனவும் இனி குடியரசுத் தலைவர் முடிவெடுப்பார் என்றும் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசு சார்பில், குடியரசுத் தலைவரிடம்தான் முறையீடு செய்ய வேண்டும் எனவும் நீட் குறித்து ஆளுநர் கூறியதில் எந்த தவறும் இல்லை என்றும் அண்ணாமலை கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் அண்ணாமலை நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது அவரிடம் ஆளுநருக்கு எதிரான தி.மு.கவின் நீட் தேர்வு போராட்டம் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அண்ணாமலை, நீட் தேர்வில் ஆளுநரின் பங்களிப்பு என்று எதுவுமே இல்லை. அவருக்கு இப்போது எந்தப் பங்களிப்பும் இல்லை. அரசு அவருக்கு அனுப்பிய



கோப்பில் கையெழுத்திட்டு, குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவிட்டார். இனி குடியரசுத் தலைவர் முடிவெடுப்பார்.

எனவே, அரசு சார்பில் குடியரசுத் தலைவரிடம்தான் முறையீடு செய்ய வேண்டும். அதேநேரம் ஆளுநர் சில கருத்துகளைக் கூறுகிறார். அதில் தவறு என்ன இருக்கிறது? நீட்டைப் பொறுத்தவரைக்கும் ஏழைகளுக்கு எதிரி இல்லை என்று கூறியுள்ளார். அரசுப் பள்ளி மாணவர்கள் நிறைய பேர் மருத்துவப் படிப்பில் சேர்ந்துள்ளதாக கூறியுள்ளார். ஆளுநரைப் பொறுத்தவரையில், அவர் கூறியுள்ள புள்ளி விவரங்களுடன் கூடிய தகவலில் எந்த தவறும் இல்லை.

ஆனால், ஆளுங்கட்சியினர் ஆளுநரைப் பேசுகின்ற முறை சரியானதா? சீண்டிப்பார், தொட்டுப்பார், பதவியை இராஜினாமா செய்துவிட்டு வா, தமிழகத்தில் எந்த தொகுதியில் வேண்டுமானாலும் நிற்க சொல்கின்றனர். ஒருவேளை ஆளுநர் தனது சொந்த ஊரான பிஹாருக்கு வரச் சொன்னால், என்ன செய்வார்கள்? தி.மு.கவினருக்குத்தான் இந்தி தெரியாதே?

எனவே, ஆளுநரை இதுபோல பேசுவது தவறு. கைத்தட்டல்களுக்கு உயர் பொறுப்பில் இருப்பவர்கள் கண்டதை எல்லாம் பேசிவிட்டால் அந்தப் பாம்பு திரும்ப வந்து கொத்திவிடும். எனவே, ஆளுநரைப் பொறுத்தவரை அவருக்கும் நீட்டுக்கும் தொடர்பு இல்லை. இப்போது சம்பந்தமே இல்லாமல் ஆளுங்கட்சியினர் ஆளுநரை சீண்டிப்பார்க்கின்றார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# கனடாவில் தீவிரமடையும் காட்டுத் தீ பரவல்: இருப்பிடங்களை விட்டு வெளியேறும் மக்கள்!





கனடாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ அனர்த்தம் காரணமாக மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறுவதற்கு முயற்சித்து வருகின்றனர் என கருத்து கணிப்பில் தெரிய வந்துள்ளது.

அங்குஸ் ரீட் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு மூலமே இந்த விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

காட்டுத் தீயினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை தவிர்க்கும் வகையில் புதிய இடங்களை நோக்கி மக்கள் செல்ல தீர்மானித்துள்ளனர்.

குறிப்பாக 35 வயதுக்கும் குறைந்த பெண்களே தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளனர் என கருத்து கணிப்பில் தெரிய வந்துள்ளது.

கனடாவின் வடமேற்கு பிராந்தியத்தில் சுமார் 237 இடங்களில் காட்டுத் தீ பரவி வருகிறது என தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் மிக மோசமான காட்டுத் தீ அனர்த்தம் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் அதிலிருந்து தப்பி பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்லவே அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் என தெரிய வருகிறது.

## ரஷ்யா - உக்ரைன் மோதலில் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி!



ரஷ்யா-உக்ரைன் மோதலுக்கு பிரிக்ஸ் நாடுகள் பேச்சுவார்த்தை மற்றும் மத்தியஸ்தம் மூலம் முடிவுக்கு கொண்டு வர தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று தென்னாப்பிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா தெரிவித்துள்ளார்.

ஜோகன்னஸ்பர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற 15 ஆவது பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் திறந்த அமர்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகெங்கிலும் உள்ள மோதல்கள் பெரும் துன்பங்களையும் கஷ்டங்களையும் ஏற்படுத்துவதாக நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

தென்னாப்பிரிக்காவின் நிலைப்பாடு அமைதியான மற்றும் நியாயமான மோதலுக்கு இராஜதந்திரம், உரையாடல், பேச்சுவார்த்தை மற்றும் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கொள்கைகளை கடைபிடிப்பது ஆகியவை தேவை என்று அவர் கூறினார்.

மோதலை அமைதியான முறையில் முடிவுக்கு கொண்டு வருவதற்கு உழைத்த உறுப்பு நாடுகளுக்கு தென்னாபிரிக்க ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ,

பிரிக்ஸ் தன்னை ஒரு நம்பகமான அமைப்பாக நிரூபித்துள்ளது. அது ஒற்றுமையுடன் நிற்கிறது மற்றும் மிகவும் சமமான உலகளாவிய அமைப்பை ஊக்குவிக்க முயல்கிறது.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான மோதலை அமைதியான முறையில் முடிவுக்குக் கொண்டுவர பல பிரிக்ஸ் நாடுகளின் முயற்சிகளுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.

இதுபோன்ற மோதல்களை பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்குக் கொண்டுவருவது நல்லது.

இந்த மோதலை பேச்சுவார்த்தை மத்தியஸ்தம் மற்றும் பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு கொண்டுவருவதற்கான பல்வேறு முயற்சிகளுக்கு பிரிக்ஸ் உறுப்பினர்கள் தொடர்ந்து ஆதரவளிப்பார்கள் என்று அவர் ரிவித்துள்ளார்.

## நேபாளத்தில் வீதி விபத்து: 7 பேர்பலி!



நேபாளத்தின் பாரா மாவட்டத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

நேபாளத்தின் – பாரா மாவட்டத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் மேலும் 19 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காத்மாண்டுவில் இருந்து ஜனக் பூருக்குச் 27 பயணிகளை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்று, பாராவில் உள்ள சூரியாமை பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது.

இதனால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

# நவீன விவசாய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் கலந்துரையாடல்







# ‘முள்ளில் விழுந்த சேலை’ நிலையில் ‘13’ இப்போது!

அவ்வாறு இப்[illegible] நோக்கில் கலந்துரையாடல் ஒன்று [illegible] நடைபெற்றுள்ளது.

இளைஞர் சமுதாயத்தை விவசாயத்தின் பக்கம் ஈர்ப்பதுடன் ஆர்வத்துடன் பங்களிக்கும் பயனாளிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி வருமான ஆதாரங்களை உருவாக்கும்

இளைஞர்களிடையே விவசாயத் தொழில் முனைவோர் சமூகத்தை உருவாக்கி கிராமப்புறங்களில் நவீன விவசாய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கௌரவ காதர் மஸ்தான் தலைமையில் வவுனியா அண்மையில் இது இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரச அதிபர், செட்டிகுளம் பிரதேச செயலாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மற்றும் திணைக்கள அதிகாரிகள், பங்குதாரர்கள் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

விவசாய அமைச்சின் இந்தத் திட்டத்தின் [illegible] கட்டத்தில் செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவின் பெரியகட்டு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 6 கிராமங்களை உள்ளடக்கி செயல்திட்டமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



# 42 லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் மாணவருக்கு

## கன்பெரா றோட்டரிக் கழகம் கல்முனை றோட்டரிக்கு வழங்கியது

( வி.ரி.சகாதேவராஜா)

மாணவர்களுக்கு வழங்கவென ஆஸ்திரேலியா கன்பேரா றோட்டரிக் கழகம் இது வரை 42 லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை கல்முனை றோட்டரிக் கழகத்துக்கு வழங்கயுள்ளது.

கல்முனை றோட்டரிக் கழகம் கல்முனை கஷ்டப் பிரதேச மாணவர்களுக்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் மேலும் ஒரு தொகுதி அப்பியாசக் கொப்பிகளை வழங்கியுள்ளது.

மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், மல்வத்த நாவலர் வித்தியாலயம், புதிய வளாத்தாப்பிட்டி, தாஹிறா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளுக்காக ஒரு லட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கல்முனை றோட்டரிக் கழகத் தலைவர் றொட்டேரியன் ஏ.எல்.ஏ. நாசர் தலைமையில் நடைபெற்றது.

இதற்கான நிதியுதவியை வழங்கிய கன்பேரா றோட்டரிக் கழகத்தின் உறுப்பினர் றொட்டேரியன் ரவீந்திரன் கலந்துகொண்டு கொப்பிகளை வழங்கினார்.

மேலும் றொட்டேரியன் மு.சிவபாதசுந்தரம், சமூக சேவைப்பணிப்பாளர், முன்னாள் தலைவர் றொட்டேரியன் கு.திருச்செல்வம், மற்றும் றொட்டேரியன் எம். அமிர்தசங்கர் ஆகியோரும் பங்குபற்றினர்.





# தற்காலிகமாக நிறுத்தப்பட்ட திட்டங்களை மீளவும் ஆரம்பிக்குமாறு அறிவுறுத்து

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள 24 திட்டங்களை துரிதமாக மீள ஆரம்பிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அந்தத் திட்டங்களை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த 24 திட்டங்களில் 09 திட்டங்கள் பல்வேறு தொடர்புடைய நிறுவன சிக்கல்களால் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த திட்டங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி சுமார் 56,529 மில்லியன் ரூபாவாகும். அந்த 09 திட்டங்களுக்கு சுமார் 1,180 மில்லியன் ரூபா ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்று அதிகாரசபை கூறுகிறது. இன்னும் 14 மில்லியன் ரூபா பணம் செலுத்த வேண்டியுள்ளது.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான மொத்த நிதித் தேவை 55,335 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஹொரணை பிரதேசத்தில் பொரளை வெலிக்கடை சிறைச்சாலை வளாகத்தை மாற்றியமைக்கும் திட்டத்துக்கு 55,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் எண்ணக்கருவாக உள்ளதாலும், சிறை வளாகத்துக்கான இடம் மற்றும் தேவைகள் தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் இறுதி ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாததாலும், நிதி ஒதுக்கீடு இல்லாததாலும் இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இத்திட்டத்தை தனியார் துறையுடன் இணைந்து கூட்டுத் திட்டமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதிகாரசபை கூறுகிறது.

நிறுவனப் பிரச்சினைகளால் நிறுத்தப்பட்டுள்ள 09 திட்டங்களில் எஞ்சிய 08 திட்டங்களுக்கு 335 மில்லியன் ரூபா மட்டுமே தேவைப்படுகிறது. மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, ரயில்வே திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்களுடனான இந்தத் திட்டங்களுக்கான வசதிகளை வழங்குவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக இந்தத் திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பல சுற்று பேச்சுகளை நடத்தியுள்ளது என்று நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் நடத்தப்பட்ட பேச்சுகளில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன என்றும் அதற்கேற்ப வேலைத் திட்டங்கள் துரித கதியில் ஆரம்பிக்கப்பட்டு வருவதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் நிதி நெருக்கடியால் ஒப்பந்ததாரர்கள் எதிர்கொண்டுள்ள மூலப்பொருள்களின் விலை உயர்வு, இறக்குமதி கட்டுப்பாடுகள், எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடி போன்ற காரணங்களால் எஞ்சிய 15 திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. இந்த திட்டங்களின் பெறுமதி 10,451 மில்லியன் ரூபாவாகும். யாழ்ப்பாண நகர மண்டப நிர்மாணத் திட்டமே மிகவும் பெறுமதியான திட்டமாகும். இத் திட்டத்தின் பெறுமதி 3,769 மில்லியன் ரூபாவாகும். இதற்காக ஏற்கனவே 1,033 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய கட்டுமானத்துக்குத் தேவையான தொகை 2,536 மில்லியன் ரூபாவாகும். நிறுத்தப்பட்டுள்ள ஏனைய 14 திட்டங்களில் 02 திட்டங்கள் கொழும்பு நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களாகும். இந்த 02 திட்டங்களுக்காக 2,438 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த 02 திட்டங்களின் அபிவிருத்திக்கு தேவையான நடவடிக்கைகள் தனியார் துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகார சபை மேலும் தெரிவிக்கின்றது. தற்காலிகமாக நிறுத்தப்பட்ட எஞ்சியுள்ள 12 திட்டங்கள் திறைசேரி நிதியின் அடிப்படையில் செயல்படுத்தப்படும். இதற்கான நிதியை மீள ஒதுக்குவது தொடர்பில், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நிதி அமைச்சுடன் கலந்துரையாடியுள்ளார். இதற்கு மேலதிகமாக, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலும் இந்த நிதித் தேவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. தேவையான ஒதுக்கீடுகள் கிடைத்தவுடன் இத்திட்டங்களை மீண்டும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

# கைதடி பொது நூலகத்துக்கு விளையாட்டுப் பொருள்கள்

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்துக்கு யாழ். லயன்ஸ் கழகத்தால் ஒரு தொகுதி உள்ளக விளையாட்டுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

லயன்ஸ் கழக உறுப்பினர் சூ.மயூரனின் தாயார் திருமதி தயாபரி சூரிய குமாரனின் பிறந்தநாளை முன்னிட்டு இந்த உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.










# பெண் இராணுவச் சிப்பாய் ஒருவரின் குடும்பத்துக்கு படையினரால் வீடு

**(பௌசுல் றிபாஸ்)**

தீ அனர்த்தத்துக்குள்ளாகி தமது குடியிருப்பு வீட்டை இழந்து நிர்க்கதியாகியிருந்த பெண் இராணுவச் சிப்பாய் ஒருவரின் குடும்பத்துக்கு அக்கறைப்பற்று இராணுவப்படையின் 241 ஆம் படைப் பிரிவினர் சகல வசதிகளையும் கொண்ட வீடு ஒன்றை ஆலையடிவேம்பில் நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர்.

பெண் இராணுவச் சிப்பாய் தவசீலன் டிரோனா இராணுவப்படை இருபத்தினான்காவது பிரிவின் மூன்றாவது காலாட் படைப்பிரிவில் தற்போது பணியாற்றி வருகின்றார்.

ஆலையடிவேம்பில் இருந்த அவரின் வீடு 2016 ஆண்டு சடுதியாக ஏற்பட்ட தீ அனர்தம் காரணமாக முற்றாகவே தரைமட்டமானதால் அவரோடு வாழ்ந்து வந்த அவரின் பெற்றோர்கள் மாத்திரமன்றி அவரோடு வாழ்ந்து வந்த வயது முதிர்ந்த தாயின் பெற்றோர்களும் மிகவும் இன்னல்களுக்கு மத்தியில் ஒரு தற்காலிக இருந்தனர்.

இலங்கை இராணுவப்படை இருபத்தினான்காவது காலாட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் வழிகாட்டலில் 241 ஆம் படைப் பிரிவினரின் பூரண பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீட்டின் இதர தேவைகளை முஸ்லிம், தமிழ் வர்த்தகர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதி நிதிகள் நிவர்த்தி செய்துள்ளனர்.

கட்டட நிர்மாணப் பணிகளையும் கூரை வேலைகளையும் படையினரே மேற்கொண்டிருந்தனர்.

இந்து சமய அனுஸ்டானத்தையடுத்து அதிகாரி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி மங்கள விளக்கேற்ற இராணுவ வீரர் திரோனாவின் மூத்த தாயாரால் புதிய வீடு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் ஆலயடிவேம்பு பிரதேச செயலாளர் வீ. பபாகரன் மற்றும் தமிழ், முஸ்லிம் வர்த்தக பிரமுகர்கள், சிவில் அமைப்புகளின் பிரதி நிதிகளும் கலந்துகொண்டனர்.

# கல்முனை வைத்தியசாலை கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்த நடவடிக்கை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள அரசாங்க மற்றும் தனியார் வைத்திய சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை தரநிர்ணயம் செய்து மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

இது சம்பந்தமான வழிகாட்டல் மற்றும் சுகாதார உதவிகளை பொதுச் சுகாதார பிரிவினரின் ஊடாக எடுக்கப்படவுள்ளது.

வளமுகாமைத்துவ செயற்றினின் கீழ் பெறப்பட்ட உபகரணங்கள் இதற்கென விஷேடமாக பயன்படுத்தப்படவுள்ளதுடன், இக் கழிவுகளை அகற்றும் செயன்முறைகளை மேற்பார்வை செய்வதற்கான களவிஜயமொன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்காலத்தில் சுகாதார பராமரிப்பு நிலையங்களில் இக்கழிவகற்றும் பொறிமுறைஅற்றவைத்தியசாலைகளைகொத்தணியாக்கி இத்திட்டத்தை முகாமை செய்யவுள்ளதுடன், தனியார் வைத்திய சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் முகாமை செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

# கடும் வறட்சி காரணமாக மடுவில் 3,244 பேர் பாதிப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக வறட்சியான காலநிலை நிலவி வருவதால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கால் நடைகளும் பாதிக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் குடிதண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தில் வறட்சி காரணமாக மடு பிரதேச செயலக பிரிவில் உள்ள பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மடு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மல்லவராஜன் கட்டையடம்பன், மாதா கிராமம், பெரிய முறிப்பு, இரணை இலுப்பகுளம், கீரிசுட்டான் போன்ற பகுதி மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

வறட்சி காரணமாகக் குறித்த கிராமங்களை சேர்ந்த 952 குடும்பங்களை சேர்ந்த 3,244 நபர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு தகவல் வழங்கியுள்ளது.

இந்த நிலையில் இவ் வறட்சியான காலநிலை தொடரும் பட்சத்தில் பாதிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.




# மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு 4 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள்

(மன்னார் நிருபர்)

கொழும்பு தேசிய வைத்திய சாலையின் வைத்தியசாலை அபி விருத்திச்சபை எனக் குறிப்பிடப்படும் தொண்டு அமைப்பின் அனுசரணை யில் நேற்று புதன்கிழமை (23) மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் ஒரு தொகுதி மருத்துவ பொருள்கள் மற்றும் உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த அமைப்பின் தலைவர் சுபேதி தேரரால் சுமார் 40 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ பொருள்கள் மற்றும் உபகரணங்கள் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள்





பணிமனையின் கீழ் இயங்கும் வைத் தியசாலைகளுக்கு வழங்கும் வகையில் கையளிக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி பங்களிப்பு மற் றும் அனுசரணையை வெளிநாடு களில் உள்ள இலங்கையர்கள் மற் றும் இலங்கையை சேராதவர்கள் வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.ய

குறித்த மருத்துவ உபகரணங்கள் நேரடியாக வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு தருவிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேற்கு ஆஸ்திரேலிய அரசால் கௌரவிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்






மேற்கு ஆஸ்திரேலிய அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் சிறந்த சமூக மொழி ஆசிரியருக்கான விருது இந்த ஆண்டு தெற்கு தமிழ்ப் பள்ளியைச் சேர்ந்த திருமதி பூர்ணிமா மயூரதனுக்குக் கிடைத்துள்ளது.

இந்த விருதுக்காகப் பல்வேறு மொழி களைச் சேர்ந்த 21 சமூக மொழிப் பாட சாலைகள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தன.

இந்த விருதானது தமிழ் மொழி பாடசாலை ஒன்றுக்குக் கிடைத்தமை இதுவே முதல் தடவையாகும்.

தெற்குத் தமிழ்ப் பள்ளியானது கடந்த 43 ஆண்டுகளாக மேற்கு ஆஸ்திரே லிய மாநிலத்தில் இளையோர்களுக்கு தமிழ் மொழி அறிவை தன்னார்வ அடிப் படையில் கற்பித்து வருவது குறிப் பிடத்தக்கது.

தெற்குத் தமிழ்ப் பள்ளியானது பல்கலைக்கழக தெரிவுக்கு தமிழ் மொழியை மேலதிக பாடமாக எடுக்கும் மாணவர்களைத் தயார்படுத்து வதிலும் ஈடுபட்டுவருவது குறிப்பிடத் தக்கது.

தெற்குத் தமிழ்ப் பள்ளியின் சேவை மேலும் தொடரவும் பூர்ணிமா ஆசிரியர் போன்று பல ஆசிரியர்களை உலகுக்கு வெளிக்காட்டவும் வாழ்த்துக்கள் தெரி விக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 25.08.2023




உங்கள் மனதில் எதிர்மறை எண்ணங்கள் எழக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும். இன்று உங்களின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும். உங்களை உற்சாகப் படுத்திக் கொண்டு நம்பிக்கையோடு இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உடல் நலக் குறைபாடு காரணமாக பணிகளை விரைந்து முடிக்க இயலாது.

நீங்கள் உங்கள் துணையுடன் இன்று வன்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் சில பாதிப்புகள் ஏற்படும். எனவே அத்தகைய உணர்வை தவிர்க்கவும்.

இன்று நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் பணத்தை சாதுர்யமாக கையாள வேண்டும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று நம்பிக்கையான நாள். நீங்கள் பயனுள்ள முடிவுகளை எடுக்கும் நாள். இன்று நடக்கும் சம்பவங்கள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

பணியிடத்தில் சுமூகமான பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் சமநிலையான உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் வளரும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் திருப்தி உணர்வு காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உறுதியான அணுகுமுறை இருந்தால் இன்று நீங்கள் நல்ல பலன்களைக் காணலாம். நீங்கள் வெற்றி பெறத் தகுதியானவர் என்று நீங்கள் உறுதியாக நம்ப வேண்டும். அதன்படி நீங்கள் உங்கள் இலக்குகளை அடைய முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் வளம் பெருகும்.

உங்கள் பணியின் செயல்திறனுக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் தனிப்பட்ட திறமைகள் மற்றும் ஆற்றலை வெளிப்படுத்தி பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடத்தில் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

நிதிநிலைமை இன்று திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலையை அதிகரிக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று உங்களுக்கு தேவையில்லாத மனக் குழப்பங்கள் ஏற்படும். அத்தகைய உணர்வுகளை தவிர்த்து நம்பிக்கையோடு செயல்பட வேண்டும்.

உங்கள் பணிகளை காலம் தாழ்த்தி செய்ய நேரலாம். தவறுகள் நேராமல் இருக்க பணிகளை கவனமுடன் மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் மனதில் குழப்பங்கள் காணப்படும். அதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான மன நிலையில் பழக இயலாத நிலை இருக்கும். மகிழ்ச்சியாக இருக்க உங்கள் மனதை தெளிவாக வைத்திருக்க வேண்டியது அவசியம்.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்காது. இன்று பண இழப்பும் அதனால் ஏமாற்ற உணர்வும் ஏற்படலாம்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படாது. கால் வலி ஏற்படும் வாய்ப்பு உள்ளது.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவதில் சில தடைகள் காணப்படும். உங்கள் திறமை மூலம் சமாளித்து இலக்கை அடைவீர்கள்.

பணியிடத்தில் பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது சவால்களை சந்திக்க நேரலாம். எனவே பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

கருத்து வேறுபாடு மற்றும் தவறான புரிந்துணர்வு காரணமாக நீங்கள் உங்கள் துணையை தவறாக புரிந்து கொள்ள நேரலாம். இதனால் ஆரோக்கியமான உறவை தக்க வைத்துக்கொள்வது கடினம்.

இன்று பணப்புழக்கம் ஏமாற்றகரமாக இருக்கும். போதிய அளவு பணம் சம்பாதிப்பதில் சில தடைகள் காணப்படும்.




இன்று உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு சாதகமான நாள். கடின உழைப்பும் உறுதியும் இன்று உங்களுக்கு வெற்றியை அளிக்கும். இன்று முழுவதும் நீங்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளையும் எளிதாக ஆற்றுவீர்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்து கொள்வீர்கள். உங்களின் இந்தப் போக்கின் காரணமாக நீங்கள் அவரை நன்கு புரிந்து கொள்ளலாம்.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்வீர்கள். அது உங்களுக்கு லாபகரமாக இருக்கும்.




இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்காது. எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் அதன் விளைவை நன்றாக யோசிக்க வேண்டும். பிறருடன் பேசும் போது பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க வார்த்தைகளை கவனமாகப் பிரயோகிக்க வேண்டும்.

உங்கள் பணிகளை ஆற்றும்போது சில ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தகவல் பரிமாற்றமும் திருப்திகரமாக இருக்காது.

இன்று நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். உணர்ச்சிவசப்படாமல் இருந்தால் இன்று நீங்கள் அமைதியாக இருக்கலாம். உங்கள் அணுகுமுறையை மாற்றிக்கொண்டு நேர்மறை எண்ணம் கொண்டு உங்கள் துணையுடன் பழகவும்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. உங்கள் அன்றாட செயல்களை திறம்பட செயல்வதை கடினமாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும். அமைதியாக இருக்கவும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. என்றாலும் உன்னிப்பாக கவனித்து பணியாற்றினால் தவறுகளை தவிர்க்கலாம். சக பணியாளர்களுடன் அமைதியான முறையில் பேச வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழக வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். உங்கள் பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 25.08.2023


தனுசு

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. இன்று கவலைகள் நிறைந்து காணப்படும். எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். நடக்கும் சம்பவங்களை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தடைகளை சமாளிக்க வேண்டும்.

பணிகள் கடுமையாக காணப்படும்.அதனை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பணிகளை நம்பிக்கையுடன் கவனமாக கையாள வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. உங்கள் நண்பர்களின் தவறான ஆலோசனையை கேட்டு உங்கள் துணையிடம் எதிர்மறையாக நடந்து கொள்வீர்கள்.


கும்பம்

இன்று உங்கள் செயல்களில் வெற்றி பெறுவீர்கள். எந்த தடைகளுமின்றி உங்கள் செயல்களில் முன்னேறுவீர்கள். இது உங்களுக்கு சாதகமான நேரம்.

பணியிடத்தில் சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை வெளிப்படுத்துவீர்கள். இருவரும் இனிமையான வார்த்தைகளை பேசி மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலை ஸ்திரமாக காணப்படும். எதிர்பாராத பணவரவு காணப்படும்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


மகரம்

இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைக்கும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துவீர்கள்.இதனால் அன்பு பெருகும்.

இன்று நிதிநிலைமை அபாரமாக இருக்கும். இன்று நீங்கள் சேமிப்பு நிலையை நன்கு பராமரிப்பீர்கள். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று அனைத்து விதத்திலும் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


மீனம்

இன்று உங்களிடம் அதிக சிந்தனை காணப்படும். நடக்கும் சம்பவங்களை லேசாக எடுத்துக் கொள்வது சிறந்தது. அமைதியாக இருக்கவும். தியானம் மேற்கொள்ளவும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். சில சவால்களை சந்திக்க நேரலாம். அதிகப் பணிகள் காரணமாக நீங்கள் சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தைப் போக்கு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் எதிர்பார்க்கும் தொலைவிடத்து பணம் உங்களுக்கு கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படுவீர்கள். சரியான சமயத்தில் உண்பது சிறந்தது.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park